TNTP160003142020

Presented on : 12-02-2020
Registered on : 13-02-2020
Decided on : 07-08-2026
Duration : 6 years, 5 months, 24 days

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலால்குடி.**

முன்னிலை : திரு.சு.அருணாச்சலம், B.E, L.L.B.(Hons),
நீதித்துறை நடுவர்,
இலால்குடி.

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07–ம் நாள் வெள்ளிகிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.21/2020**

**CNR.No. TNTP16-000314-2020**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | அரசுக்காக: காவல் ஆய்வாளர்,<br>காவல் நிலையம், இலால்குடி,<br>குற்ற எண். 260/2019 |
| | | –எதிர்– |
| எதிரியின் பெயரும், விலாசமும் | : | ராஜமாணிக்கம் த.பெ.கருப்பையா வயது 45/19<br>MGR நகர், E.வெள்ளனூர், இலால்குடி தாலுகா, திருச்சி மாவட்டம் |
| எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் | | அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி வந்து, ஒருவருக்கு மரணத்தை விளைவித்தல் – இதச பிரிவுகள் 279, மற்றும் 304(A) –ன் கீழ் தண்டிக்கத்தக்கது. |
| எதிரியின் பதிலுரைகள் | : | குற்றவாளி இல்லை |

| | | |
|---|---|---|
| நீதித்துறை நடுவரின் தீர்ப்பு | : | எதிரியின் மீது இதச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் கீழ், சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின்படி எதிரி குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. |

இவ்வழக்கு 13.02.2020–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை I திருமதி.ஜெயந்தி, அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.அமிர்தராஜன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களையும், இவ்வழக்கு ஆவணங்களையும் ஆய்வு செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

1) அரசு தரப்பு வழக்கானது, கடந்த 28.06.2019 ம் தேதி இவ்வழக்கின் வாதி தங்கவேல் என்பவர் திருச்சியிலிருந்து டால்மியாபுரம் சிமெண்ட் கம்பெனிக்கு லோடு ஏற்ற TN 88 D 5493 டிரெய்லர் லாரியை எடுத்து கொண்டு திருச்சி–சிதம்பரம் மெயின்ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும்போது இடங்கிமங்கலம்போஸ்ட் ஆபீஸ் அருகில் இடதுபுறமாக சுமார் மாலை 3.30 மணிக்கு சென்று கொண்டிருந்தபோது அதே ரோட்டில் வாதிக்கு பின்னால் வந்த XL 100 FOR Registration வாகன பதிவு எண் இல்லாத இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் எதிரி E.வெள்ளனூர் MGR நகரை சேர்ந்த கருப்பையா மகன் ராஜமாணிக்கம் என்பவர் தனது வாகனத்திற்கு பின்னால் இ.வெள்ளனூர் கிராமம் M.G.R. நகரை சேர்ந்த சின்னையன் மகன் மகேந்திரன் என்பவரை உட்கார வைத்துக்கொண்டு அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து வாதி ஓட்டி வந்த லாரியை முந்துவதற்காக இடங்கிமங்கலம்போஸ்ட் ஆபீஸ் வேகத்தடை அருகில் வந்து பிரேக் போட்டதில் பின்னால் உட்கார்ந்து இருந்த மகேந்திரன் லாரியின் நடுபகுதியில் உள்ள சென்டர் ஆக்சில் விழுந்து தலையிலும் மூக்கிலும் பலத்த இரத்த காயம் ஏற்பட்டு அதே இடத்தில்

இறந்துவிட்டதாக, எதிரியின் மீது இதச பிரிவுகள் 279 மற்றும் 304(A) ன் கீழ், இலால்குடி காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கானது ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.21/2020 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டது. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான போதிய முகாந்திரம் இருந்ததால், எதிரியின் மீது இதச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் படி, குற்றச்சாட்டுகள் விளக்கிக்கூற எதிரி தன்னை குற்றவாளி அல்ல என்று கூறினார். எனவே அரசு தரப்பில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :–**

4.1) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 28.06.2019ம் தேதி திருச்சி–டால்மியாபுரம் சிமெண்ட் கம்பெனிக்கு சிமெண்ட் ஏற்றுவதற்காக TN 88 D 5493 என்ற பதிவெண் உடைய ட்ரெய்லர் லாரியை எடுத்துக் கொண்டு திருச்சி–சிதம்பரம் செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் இடது ஓரமாக செல்லும் போது மதியம் 03.30 மணியளவில் இடக்கிமங்கலம் போஸ்ட் ஆபீஸ் அருகில் சென்றபோது, தனக்கு பின்னால் அதே திசையில் வந்த பதிவெண் இல்லாத XL 100 இருசக்கர வாகனமானது பின்னால் ஒருவரை ஏற்றிக் கொண்டு அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து தனது லாரிக்கு வலதுபுறமாக ஏறி சென்று வேகத்தடைக்கு அருகில் பிரேக் போட்டதால் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து இருந்தவர் தனது லாரியின் சென்டர் ஆக்சில் விழுந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது

என்றும், அதன்பிறகு இலால்குடி காவல் நிலையம் சென்று வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு கொடுத்தேன் என்றும், தற்போது தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், ஆஜர் எதிரி தான் சம்பவ தினத்தன்று விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் என்றும், போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன் எனவும் சாட்சியமளித்துள்ளார்.

4.2) அ.சா.2 தனது சாட்சியத்தில், சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு மதியம் 3.45 மணியளவில் தான் வீட்டில் இருந்த போது பக்கத்தில் இருந்தவர்கள் தனது அண்ணன் இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், தகவல் கேள்விபட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றும், அப்போது தனது அண்ணன் சிமெண்ட் ஏற்றும் பெரிய லாரியின் டீசல் டேங் கின் அருகே அடிபட்டு இறந்து இருந்தார் என்றும், விபத்து சம்பவம் எப்படி நடந்தது என தான் கேட்டு தெரிந்து கொள்ள வில்லை என்றும், தான் லாரியை ஓட்டி வந்த நபரை பார்க்க வில்லை என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்ய வில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.3) அ.சா.3 தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் தன்னுடைய கையொப்பம் இல்லை என்றும், வழக்கு சம்பவம் குறித்து தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.4) அ.சா.4 மற்றும் அ.சா.5 தங்களது சாட்சியத்தில், வழக்கு விபத்தில் இறந்துபோன மகேந்திரன் என்பவரை தங்களுக்கு தெரியும் என்றும், அ.சா.1 யை தங்களுக்கு தெரியாது என்றும், வழக்கு பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகிவிட்டனர்.

4.5) அ.சா.6 தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகமில்லை என்றும், காலை 11 மணியளவில் தான் சொந்த வேலையாக இலால்குடி காவல் நிலையம் சென்றபோது போலீசார் எழுதப்படாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றுக் கொண்டனர்

என்றும், அந்த கையெழுத்தை தான் எதற்காக போட்டுக் கொடுத்தேன் என்று தனக்கு தெரியாது என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.6) அ.சா.7 தனது சாட்சியத்தில், கடந்த 28.06.2019 ம் தேதி தான் நிலைய பொறுப்பில் இருந்த போது தங்கவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என்றும், காவல் ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

4.7) அ.சா.8 தனது சாட்சியத்தில், கடந்த 28.06.2019–ம் தேதி நிலைய குற்ற எண். 260/2019, இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்காக தனது பார்வைக்கு வைக்கப்பட்டது என்றும், தான் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றும், கடந்த 28.06.2019 ம் தேதி 17.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன் என்றும், பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பட்டியல் சாட்சிகளான 1 முதல் 3 வரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இவ்வழக்கில் கடந்த 29.06.2019 ம் தேதி காலை 6 மணியளவில் இலால்குடி அரசு மருத்துவமனையில் உள்ள பிரேதகிடங்கில் வைத்து இவ்வழக்கில் இறந்துபோன மகேந்திரன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன் என்றும், பின்னிட்டு இவ்வழக்கில் இறந்துபோன நபரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக இரண்டாம் நிலை காவலர் சுரேஷ்பாண்டி என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன் என்றும், பின்பு பட்டியல் சாட்சிகளான 4 முதல் 6 வரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரியை 29.06.2019 அன்று 18.15 மணிக்கு

இலால்குடி காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், இவ்வழக்கில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளர் சத்தியமூர்த்தி என்பவருக்கு அனுப்பி வைத்து வாக்குமூலம் பதிவு செய்து தணிக்கை சான்று பெற்றேன் என்றும், இவ்வழக்கில் இறந்துபோன மகேந்திரன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் மணிமுடி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன் என்றும், இவ்வழக்கில் பட்டியல் சாட்சியான 11, 12 ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், தன்னுடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

5) அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1) (ஆ)ன்படி வினவியபோது அவற்றை பொய் எனக்கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரி மீதான இதச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதுதான்.

**<u>தீர்வு:–</u>**

7) அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.8 வரையிலான சாட்சியங்கள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 சான்றாவணங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் வாதிட்டார். மாறாக எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

8) இந்த வழக்கை பொறுத்தவரையில் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க மிக முக்கிய சாட்சிகளாக கருதப்படுபவர்கள். அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகும். அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.5 இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 மற்றும் அ.சா.5 பிறழ் சாட்சிகளாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. அ.சா.2 கேள்விப்பட்ட சாட்சியாவார். அ.சா.3, வழக்கு சம்பவம் குறித்து தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.6 பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததை பற்றி சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகிவிட்டார். அ.சா.7 முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ததை பற்றி சாட்சியமளித்துள்ளார். அ.சா.8 இவ்வழக்கில் புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றி சாட்சியமளித்துள்ளார்.

9) கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 தனது முதல் விசாரணையில், சிமெண்ட் ஏற்றுவதற்காக TN 88 D 5493 என்ற பதிவெண் உடைய ட்ரெய்லர் லாரியை எடுத்துக் கொண்டு திருச்சி–சிதம்பரம் செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் இடது ஓரமாக செல்லும் போது மதியம் 03.30 மணியளவில் இடக்கிமங்கலம் போஸ்ட் ஆபீஸ் அருகில் சென்றபோது, தனக்கு பின்னால் அதே திசையில் வந்த பதிவெண் இல்லாத XL 100 இருசக்கர வாகனமானது பின்னால் ஒருவரை ஏற்றிக் கொண்டு அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து தனது லாரிக்கு வலதுபுறமாக ஏறி சென்று வேகத்தடைக்கு அருகில் பிரேக் போட்டதால் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து இருந்தவர் தனது லாரியின் சென்டர் ஆக்சில் விழுந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றும், அதன்பிறகு இலால்குடி காவல் நிலையம் சென்று வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு கொடுத்தேன் என்றும், தற்போது தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், ஆஜர் எதிரி தான் சம்பவ தினத்தன்று விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர் என்றும், போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன் எனவும் சாட்சியமளித்துள்ளார்.

10) அ.சா.1 தனது முதல் விசாரணையில், எதிரியையும் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தையும் அடையாளப்படுத்தி சாட்சியத்துள்ளார். அ.சா.1 தனது முதல்

விசாரணையில், எதிரி பதிவு எண் இல்லாத XL இருசக்கர வாகனத்தில் பின்னால் ஒருவரை ஏற்றிக்கொண்டு அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து தனது லாரிக்கு வலதுபுறமாக ஏறி சென்று வேகத்தடைக்கு அருகில் பிரேக் போட்டதால் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து இருந்தவர் எனது லாரியின் சென்டர் ஆக்சில் விழுந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என சாட்சியமளித்துள்ளார்.

11) அ.சா.1 தனது முதல் விசாரணையில், எதிரி அதிவேகமாக இருசக்கர வாகனத்தை இயக்கியதே விபத்திற்கு காரணம் என சாட்சியமளித்துள்ளார். சம்பவ இடத்தில் அனுமதிக்கப்பட்ட வேகம் எவ்வளவு என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்படாத நிலையில், அதிவேகம் என்பது எதை குறிக்கிறது என்பது அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து தெளிவுப்படுத்தப்படவில்லை. மேலும் அதிவேகம் என்பது நபருக்கு நபர் மாறுபடும். ஒரு நபருக்கு அதிவேகம் என தோன்ற கூடியது மற்றொரு நபருக்கு சாதாரண வேகமாக தோன்றலாம். மேலும் ஒரு நபர் அதிவேகமாக வாகனத்தை இயக்குவது மட்டுமே அவர் அஜாக்கிரதையாக செயல்பட்டார் என்பதை குறிக்காது.

12) மாண்புமிகு உச்சநீதிமன்றம் State of Karnataka Vs Satish 1998(8) SCC 493 என்ற தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

> Merely because the truck was being driven at a "high speed" does not bespeak of either "negligence" or "Rashness" by itself. None of the witnesses examined by the prosecution could give any indication, even approximately, as to what they meant by "high speed". "High speed" is a relative term. It was for prosecution to bring on record material to establish as to what it meant by "high speed" in the facts and circumstances of the cases. In a criminal trial, the burden of providing everything essential to the establishment of the charge against an accused always rests on the prosecution and there is a presumption of innocence in favour of the accused until the contrary is proved. Criminality is not to be presumed, subject of course to some statutory exceptions. There is no such statutory exception

> pleaded in the present case. In the absence of any material on the record, no presumption of rashness or negligence could be drawn by invoking the maxim “res ipsa loquitur”

13) அ.சா.1 தனது முதல் விசாரணையில், எதிரி தான் ஓட்டி சென்ற லாரிக்கு வலதுபுறமாக ஏறி சென்று அதிவேகமாக வந்து வேகத்தடைக்கு அருகில் பிரேக் போட்டதால் இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து இருந்தவர் தனது லாரியின் சென்டர் ஆக்சில் விழுந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என சாட்சியமளித்துள்ளார்.

14) அ.சா.1 தனது முதல் விசாரணையில், எதிரி தனது லாரியின் வலதுபுறமாக ஏறி அதிவேகமாக வந்து வேகத்தடைக்கு அருகில் பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டது என சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி லாரியின் வலதுபுறமாக ஏறி சென்று அதிவேகமாக வந்து வேகத்தடைக்கு அருகில் பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டது என எதிரியின் கவனக்குறைவான செயல் குறித்து சாட்சியமளித்துள்ளார்.

15) அ.சா.1 தனது முதல் விசாரணையில், சம்பவமானது வேகத்தடைக்கு அருகில் நடந்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால் வேகத்தடையிலிருந்து எவ்வளவு தொலைவில் சம்பவம் நடந்தது என்பது குறித்து அ.சா.1 எந்த ஒரு சாட்சியமும் அளிக்கவில்லை.

16) அ.சா.1 அவருடைய புகாரிலும், சம்பவமானது வேகத்தடைக்கு அருகில் நடந்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணையில், "**விபத்து வேகத்தடையிலிருந்து எவ்வளவு தொலைவில் நடந்தது என்றால் வேகத்தடையிலேயே நடந்தது எனவும் எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் விபத்து வேகத்தடையின் முன்பு நடந்தது என சொல்லியிருந்தால் அது தவறு என்றால சரிதான்**" எனவும் சாட்சியமளித்துள்ளார்.

17) அ.சா.1 தனது புகாரிலும் முதல் விசாரணையிலும் சம்பவமானது வேகத்தடைக்கு அருகில் நடைபெற்றது என சொல்லிவிட்டு தனது குறுக்கு விசாரணையில் விபத்தானது வேகத்தடையிலேயே நடைபெற்றது என முன்னுக்கு பின்

முரணாக சாட்சியமளித்துள்ளது அவரது சாட்சியத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் இந்த முரண்பாடானது எதிரி தரப்பால் வெளிக்கொணரப்பட்டுள்ளது. சம்பவ இடம் குறித்த அ.சா.1ன் முன்னுக்கு பின் முரணான சாட்சியமானது அரசு தரப்பு வழக்கை முற்றிலும் பாதிப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

18) கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 எதிரியின் கவனக்குறைவான செயல் குறித்து சாட்சியமளித்திருந்தாலும் சம்பவ இடம் குறித்த அ.சா.1ன் முன்னுக்கு பின் முரணான சாட்சியமானது அவரது சாட்சியத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் இந்த சந்தேகமானது அ.சா.1ன் சாட்சியத்தின் நம்பக தன்மையை குறைக்கிறது.

19) சம்பவ இடம் குறித்த அ.சா.1ன் முன்னுக்கு பின் முரணான சாட்சியத்தால் ஏற்படும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி எதிரிக்கு எதிரான இதச பிரிவு 279, 304(A)ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20) ஆகவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று முடிவு செய்து, எதிரி குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**21) இறுதியாக,**

எதிரியின் மீது இதச பிரிவுகள் 279 மற்றும் 304(A)ன் கீழ், சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின்படி எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச.பிரிவு 255(1)ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

22) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரத்தை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால்

பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.08.07 15:58:35 +0530

நீதித்துறை நடுவர்
இலால்குடி.

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | தங்கவேல் |
| அ.சா.2 | பெரியசாமி |
| அ.சா.3 | சக்திவேல் |
| அ.சா.4 | புவியரசு |
| அ.சா.5 | வல்லவன் |
| அ.சா.6 | பாண்டியன் |
| அ.சா.7 | சரத்குமார் |
| அ.சா.8 | முத்துக்குமார் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

**Judicial Form No.68**

| Sl.No of the exhibit | Description of the exhibit and its date | Date,When the exhibit was filed in the case | How marked | By Whom marked | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் மனு | 16.04.26 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2.. | பார்வை மகஜரிலுள்ள அ.சா.6 ன் கையொப்பம் | 04.06.26 | அ.சா.ஆ.2 | அ.சா.6 | அசல் |
| 3. | முதல் தகவல் அறிக்கை | 24.06.26 | அ.சா.ஆ.3 | அ.சா.7 | அசல் |
| 4. | பார்வை மகஜர் | 24.06.26 | அ.சா.ஆ.4 | அ.சா.8 | அசல் |
| 5. | மாதிரி வரைபடம் | 24.06.26 | அ.சா.ஆ.5 | அ.சா.8 | அசல் |
| 6. | பிரேத விசாரணை அறிக்கை | 24.06.26 | அ.சா.ஆ.6 | அ.சா.8 | அசல் |
| 7. | பதிவெண் இல்லாத இருசக்கர | 24.06.26 | அ.சா.ஆ.7 | அ.சா.8 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வாகனத்திற்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகன அறிக்கை | | | | |
| 8. | TN 88 D 5493 என்ற வாகனத்தின் வாகன தணிக்கை சான்று | 24.06.26 | அ.சா.ஆ.8 | அ.சா.8 | அசல் |
| 9. | பிரேத பரிசோதனை அறிக்கை | 24.06.26 | அ.சா.ஆ.9 | அ.சா.8 | அசல் |

**சான்று பொருட்கள்:–** இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–**இல்லை

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.08.07 15:58:27 +0530

நீதித்துறை நடுவர்
இலால்குடி.

**குறிப்பு:–**

1. வழக்கின் முடிவு காவல்நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்தவொரு சாட்சியும் மூன்று வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
4. இவ்வழக்கின் எதிரி குற்றவாளி இல்லை என்று கு.வி.மு.ச. பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.08.07 15:58:30 +0530

நீதித்துறை நடுவர்
இலால்குடி.